மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் பொறுங்கள்.

2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஈ) சென்னை, மேற்கு மாம்பலம், அயோத்தியா மண்டபம் (இராம சமாஜ்) இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு முன்பாக, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள், என்னுடைய அறையில் வந்து ஏதோ சொன்னீர்கள். என்னவென்று ஒரே வரியில் சொல்லுங்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பை தங்களிடத்தில் கொடுத்திருக்கிறோம். நான் அதனை ஒரே வரியில் எப்படி சொல்ல முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சப்ஜெக்ட் என்னவென்று சொல்லிவிட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்ல வேண்டியதுதான். சரி, என்னவென்று சொல்லுங்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: நேற்று சென்னையில் மேற்கு மாம்பலத்தில் அமைந்திருக்கக்கூடிய அயோத்தியா மண்டபம் என்று அழைக்கப்படும் கலாச்சார ஆன்மிக அன்பர்களால் நடத்தப்படுகின்ற அமைப்பு, சட்ட முறைகளைப் பின்பற்றாமல் இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) குறிப்பாக, ஐயா, ஒரேயொரு நிமிடம். நேற்று அந்தப் பகுதிக்கு நான் சென்றிருந்தேன். அந்தப் பகுதியிலே ** அந்த மக்கள் கூறுகிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நான் சொல்கிறேன். சற்று பொறுங்கள். நான் உங்களைப் பேச அனுமதிக்கிறேன். நீங்கள் சாதி ரீதியாகப் பேசிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. நீங்கள் பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 ஏப்ரல் 12]

திருமதி வானதி சீனிவாசன்: *நான் இதனை நிச்சயமாக சமூக ரீதியாகக் குறிப்பிடுவதற்காக இங்கே சொல்லவில்லை. சமூக நீதியென்றால் அது சம நீதியாக இருக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்க வேண்டுமென்பதற்காக . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மத ரீதியாக, சாதி ரீதியாக மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் தங்களுடைய கருத்துகளை இந்த அவையில் பதிவு செய்ய மாட்டார்கள். நீங்கள் புதிதாக வந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர். உங்கள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் இருக்கிறார்கள். அனுபவம் வாய்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் இருக்கிறார். அவர்களுடன் கலந்துபேசி, அவையில் பேசும்போது, எத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டறிந்து, சற்று கவனத்துடன் பேசுங்கள். மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்குப் பதில் இருந்தால் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத ரீதியாக, சாதி ரீதியாக பேசிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மக்களுடைய உணர்வுகள், அவர்களுடைய எண்ணங்கள் மதிக்கப்பட வேண்டும். மரியாதைக்குரிய மாநிலத்தினுடைய முதல்வர் அவர்கள் இது அனைவருக்குமான ஆட்சியாக இருக்க வேண்டும் என்பதை அடிக்கடி கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆக, சமூக நீதி என்பது, அந்தச் சமூகமும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்களுடைய உணர்வுகளை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்களுக்கு திரும்பவும் சொல்லிக்கொள்வது என்னவென்றால், ஏதோ ஒரு சமூகத்திற்கு எதிராக இந்த அரசு செயல்படுகிறது என்பதுபோல் கூறிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், உங்களிடத்தில்*

பதிலிருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பதிலிருந்தால் ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமாஜம் 1958 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்த சமாஜத்தின் founder, M.V. ரமணி என்பவர் 2004 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பல்வேறு முறைகேடுகள் நடப்பதாகப் புகார் அளித்துக்கொண்டே வருகின்றார். அந்தப் புகாரின்மீது 2013 ஆம் ஆண்டு ஓர் ஆய்வாளரைக் கொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வாளர் விசாரணையின் அடிப்படையில் இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம், 1959 சட்டப் பிரிவு 6, உட்பிரிவு 20–ன்படி அந்த சமாஜம் மேற்கொள்கின்ற அனைத்து நடவடிக்கைகளும் இந்தச் சட்டப் பிரிவுக்கு எதிரானது என்று அறிக்கை அளிக்கப்பட்டது. அந்த அறிக்கையின்படி உதவி ஆணையாளர் அன்றையதினம், சட்டப் பிரிவு 49, உட்பிரிவு 1–ன்படி தேனாம்பேட்டையில் அமைந்திருக்கின்ற அருள்மிகு சுப்ரமணியர் சுவாமி திருக்கோயிலினுடைய செயல் அலுவலரை இந்த சமாஜத்தின் தக்காராக நியமிக்கிறார். இதனை எதிர்த்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த சமாஜத்தினர் மேல்முறையீட்டுக்குச் செல்கிறார்கள். 2014 ஆம் ஆண்டு மேல்முறையீட்டுக்குச் சென்றபொழுது, அதன்மீது தடையாணை பிறப்பிக்கப்படுகின்றது. அந்தத் தடையாணையைத் தொடர்ந்து வழக்கு நடைபெற்று வருகின்றது.

பிற்பகல் 12–05

கடந்த மாதம் 17–3–2022 அன்று மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி அவர்கள் இந்தத் தடையாணையை இரத்து செய்து, அந்த வழக்கைத் தள்ளுபடி செய்து, தக்கார் நியமனம் செல்லும் என்று ஆணை பிறப்பித்து, மேல்முறையீடு என்றால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கொண்டு சென்று தீர்வு காணுங்கள் என்று அவரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து, அந்த சமாஜத்தை நிருவகித்து வருபவர்களிடம், இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையாளர், செயல் அலுவலர், தொடர்ந்து இந்த நீதிமன்றத் தீர்ப்பை வற்புறுத்துகிறார்கள். ஏற்கெனவே 2013 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட அந்த உத்தரவை, நேற்றையதினம் அமலுக்குக் கொண்டுவருவதற்காக, ஸ்ரீராம சமாஜத்திற்குச் செல்கிறார்கள். அப்போது, மாண்புமிகு

உறுப்பினர் சார்ந்த கட்சியின் தலைவர் அங்கே வந்து அமர்ந்துகொள்கிறார். 50, 60 மக்களைத் திரட்டிவந்து, பூட்டு போடுகிறார். உள்ளே நுழைய முற்பட்ட இந்து சமய அறநிலையத் துறையின் உதவி ஆணையாளர், செயல் அலுவலர், இணை ஆணையாளர், பெயர்களை வேண்டுமானாலும் குறிப்பிடுகிறேன், ரேணுகா தேவி மற்றும் கவிதா ஆகியோர் மீது கல்லெறி சம்பவத்தில் ஈடுபடுகிறார்கள். இதன் தொடர்ச்சியாக, மாவட்ட ஆட்சியாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, முறையாக அந்த வட்டாரத்தைச் சார்ந்த தாசில்தார் வரவழைக்கப்பட்டு, அவர் முன்னிலையில், சரிபார்ப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு, உடனடியாக அந்த சமாஜத்தின் பொறுப்பு, இந்து சமய அறநிலையத் துறை ஏற்கெனவே நியமித்த தக்கார் வாயிலாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. அத்துடன் அந்த சமாஜத்தால் நடத்தப்படுகின்ற திருமண மண்டபம், அதன் காரியக் கொட்டகை—இந்தியாவிலே இருக்கின்ற காரியக் கொட்டகைகளிலேயே குளு குளு வசதியோடு இருக்கின்ற ஒரே காரியக் கொட்டகை அதுவாகத்தான் இருக்கும்—ஒரு சதுர அடிக்கு (sq.ft.) 60 ரூபாய் வாடகை வாங்குகிறார்கள். ஒருவர் ஈமக் காரியம் செய்ய வேண்டுமென்றால், பித்ரு தோஷம் கழிக்க வேண்டுமென்றால், குறைந்தபட்சம் 2000 ரூபாய் முதல் 3000 ரூபாய் வரை வாடகை தர வேண்டும். அப்படிப்பட்ட ஓர் அருமையான சமாஜம். பொது மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய ஒரு நல்ல சமாஜம். இந்தச் சட்ட உட்பிரிவுகள் என்ன சொல்கிறதென்றால், பொது நல நோக்கோடு, சமாஜம் நடத்துகின்றவர்கள், ஒரு படத்தை வைத்து வழிபட்டால் தவறில்லை. அந்தத் திருக்கோயிலின் உள்ளே, நம்முடைய விசாரணை அதிகாரிகளுக்கு அவர்கள் தகவல் தெரிவிக்கின்றபோது, அங்கே சிலைகள் ஏதும் இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்ற Affidavit–ல், – – ராமர் சிலை, சீதா தேவி சிலை, அனுமார் சிலை போன்ற சிலைகளை வைத்து வழிபடுகிறார்கள். ஒவ்வொரு ஹோமத்திற்கும் ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் ரூபாய் என்று வசூலிக்கிறார்கள். இதனை ஒரு கூட்டாகச் சேர்ந்து, பக்தர்களுடைய பணத்தை அதிக அளவில் சுரண்டுகின்ற ஒரு * கூட்டம் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இன்றைக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு,

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

ஏதோ குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்கு எதிரானவர்கள் என்கின்ற ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்குவதுபோல் பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

ஓய்வு பெற்ற அர்ச்சகர்களுக்கு ரூ.3,000/– என்றிருந்த ஓய்வூதியத் தொகையை ரூ.5,000/– ஆக உயர்த்திய ஆட்சி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் இருக்கின்ற 11,959 திருக்கோயில்களில் ஒருகால பூஜை திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து, 30 ஆண்டுகள் வரை ஒரு இலட்சம் ரூபாய்தான் வைப்பு நிதியாக வைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், கூடுதலாக ஒரு இலட்சம் ரூபாயை ஒதுக்கி, 129.50 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, திருக்கோயில்களில் ஒளிவிளக்கேற்றியிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு நிறுத்தவில்லை. அர்ச்சகர்களுக்கு எதிரான ஆட்சி என்கின்ற மாயத் தோற்றத்தை உருவாக்குபவர்களுக்காக இதைச் சொல்கிறேன். திருக்கோயில்களில் பணிபுரிந்துகொண்டிருந்த 9,590 அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்கள் இதுவரை பணிவரன்முறைபடுத்தப்படவில்லை. தட்டில் விழுகின்ற சொற்ப காசுகள்தான் அவர்களது ஜீவாதாரமாக இருந்தது. அவர்களையும் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்காக, மாதந்தோறும் 1000/–ரூபாய் என்று ஊக்கத் தொகையை வழங்கி, ரூ.10 கோடியை மாதந்தோறும் செலவழிக்கின்ற ஆட்சி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

ஏதாவது ஒரு மாய பிம்பத்தை ஏற்படுத்தி ஏதாவதொரு சட்டம்–ஒழுங்கு குலைவை ஏற்படுத்தி, அதில் குளிர் காய்ந்து ஒரு தளம் அமைக்கலாம் என்று நினைத்தால்–இது 'திராவிட மாடல்' ஆட்சி–இதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எந்தவகையிலும் வளைந்து கொடுக்கமாட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) இது சட்டத்தின் ஆட்சி. சட்டம்–ஒழுங்கு பாதிக்கப்படுகிறதென்றால், அது யாராக இருந்தாலும் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பயப்படமாட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நீதிமன்றத் தீர்ப்பைத்தான் நாங்கள் இன்றைக்கு அமல்படுத்தியிருக்கின்றோம். மேலும், மேல்முறையீட்டு மனுவாக நீதிமன்றத்திற்கு நீங்கள்

2022 ஏப்ரல் 12] [திரு. பி.கே. சேகர்பாபு]

சென்றிருக்கின்றீர்கள். இந்த வழக்கு இன்றைக்கு விசாரணைக்கு வர இருக்கின்றது. நீதிமன்றம் என்ன வழிகாட்டுகின்றதோ, அதைத் தொடர்ந்து, சட்டத்தின்படி, இந்து சமய அறநிலையத் துறை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு செயல்படும். இதில் எந்தவிதத்திலும் மதங்களுக்கோ, இனங்களுக்கோ, மொழி பேசுகின்ற மக்களுக்கோ, பாதிப்பான செயல் இல்லை, இல்லை, இல்லை என்பதை உறுதிபடுத்தி, இது சட்டத்தின் ஆட்சி என்பதை நான் மீண்டும் மீண்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தங்களது பதிலுரையில், 'ஒரு * கூட்டம் அந்த நிதியைச் சுரண்டுகிறது' என்ற வார்த்தையைச் சொன்னார். வழக்கு விசாரணையில் இருக்கும்போது அந்த வார்த்தையை அவையில் பதியலாமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்பதைக்கூட 'ஒரு கூட்டம்' என்று மாற்றிக்கொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவ்வாறே திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

---

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை நீதிமன்றத்தில் இருக்கிறது. இன்று அதிலே தீர்ப்பை எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம். இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேகர்பாபு அவர்கள் மிக விளக்கமாக, என்ன சொல்ல வேண்டுமோ, அவை அனைத்தையும் பதிலாக இங்கே தந்திருக்கிறார்கள். எனவே, நான் அதற்குள் அதிகம் செல்ல விரும்பவில்லை.

இருந்தாலும், பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள். அது என்னவென்று கேட்டால், ஏழை மக்களைப் பாதிக்கக்கூடிய பிரச்சினைகளில் நீங்கள் கொஞ்சம் அதிகம் கவனம் செலுத்துங்கள். இதுதான் என்னுடைய வேண்டுகோள். சாமானிய மக்களைப் பாதிக்கிறவகையில், இன்றைக்குப் பெட்ரோல் விலை, டீசல் விலை, அதேபோன்று கேஸ் சிலிண்டர் விலை, இவையெல்லாம் உயர்ந்துகொண்டே போய்க்கொண்டிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துகின்ற முயற்சியிலே நீங்கள் ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், நம்முடைய மாநிலத்திற்கு வரவேண்டிய நிதியைப் பற்றி, விளக்கமாக, விரிவாக சம்பந்தப்பட்ட ஒன்றிய அமைச்சர்களிடத்திலே, குறிப்பாக, மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடத்திலே நான் வலியுறுத்திவிட்டு வந்திருக்கிறேன். எனவே, அதற்கு நீங்கள் support–ஆக இருந்து, அதைப் பெறுவதற்கான முயற்சியிலே ஈடுபட வேண்டும். நம்முடைய மாநில மக்களுக்கு எது சாதகம் என்பதைப் புரிந்துகொண்டு நீங்கள் நடந்துகொள்ள வேண்டும். எனவே, தேவையில்லாமல் இதிலே அரசியலைப் புகுத்தி, அதன்மூலமாக நீங்கள், உங்களுடைய கட்சியைப் பலப்படுத்த வேண்டும், வளப்படுத்த வேண்டும் என்று நினைத்தீர்களேயானால், அது நடக்கவே நடக்காது என்பதை நான் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)